# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல்

**கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நீதி அமைச்சர் அவர்களால் அவர்களால் 2017, பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, சனவரி மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***164 ஆம் சட்டமூலம்*** ]


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 005045 - 475 (2017/02)

## கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல்

ச.வ.ஓ. 53/2015

### கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்பதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்பதற்கான சட்டம் என எடுத்துக் காட்டலாம்.

*கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதி தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் கைமீட்டல்.*

**2.** கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதியொன்று, கைமீட்கப்படுவதற்கு நன்கொடை பெறுநருக்கு எதிராக அத்தகைய உறுதியின் நன்கொடையளிப்பவரினால் கோப்பிடப்பட்ட வழக்கு நடவடிக்கையொன்றில் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் மட்டுமே முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்கப்படலாம்.

*வழக்கு தொடரப்பட வேண்டிய காலப்பகுதி.*

**3.** நீதிமன்றமானது 2 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு வழக்கை, அது அத்தகைய உறுதி நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து பத்து வருடக் காலப்பகுதியினுள்ளும், வழக்கெழு காரணம் எழுந்த தேதியிலிருந்து இரண்டு வருடங்களுக்குள்ளும் தொடுக்கப் பட்டிருந்தாலேயன்றி அதனை ஏற்றுக் கவனித்தலாகாது.

*வழக்காளி வழக்கை முடிவுறாத வழக்காகப் பதிவு செய்வதற்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல்.*

**4.** (1) வழக்காளி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப் பட்ட வழக்கொன்றில், வழக்கை முடிவுறாத வழக்காகப் பதிவு செய்வதற்காக-

(அ) கைமீட்கப்படுவதற்கு நாடப்பட்ட உறுதி எந்த மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டதோ அந்த மாவட்டத்தின் காணிப் பதிவாளருக்கு முகவரியிடப்பட்ட; அல்லது

(ஆ) கைமீட்கப்படுவதற்கு நாடப்பட்ட உறுதி பதிவு செய்யப்பட்டிராதவிடத்து, அத்தகைய உறுதியில் குறிப்பீடுசெய்யப்பட்ட காணி எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின் காணிப்பதி வாளருக்கு முகவரியிடப்பட்ட, விண்ணப்பமொன்றைப் பிராதுடன் நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும் அல்லது கோப்பிடுவித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்பம் முப்பிரதிகளில் இருத்தல் வேண்டுமென்பதுடன், "மூலப்பிரதி", "1ஆவது பிரதி" மற்றும் "2ஆவது பிரதி" என அடையாள மிடப்படுதலும் வேண்டும். அத்துடன் பொருளளவில் (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவு கட்டளைச் சட்டத்தில் எடுத்துக் காட்டப்பட்ட படிவத்தில் இருத்தலும், அத்துடன் நீதிமன்றத்தினால் அவ்வழக்குக்கு குறித்தளிக்கப்படவேண்டிய இலக்கத்தை உட்புகுத்து வதற்காகவெற்று இடைவெளியொன்றைக்கொண்டிருத்தலும்வேண்டும்.

*குடியியல் நடபடிமுறைச் சட்டக்கோவையின் ஏற்புடைமை.*

**5**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப்படும் ஒவ்வொரு வழக்கும், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடபடிமுறைச் சட்டக்கோவையில் ஏற்பாடுசெய்யப்பட்ட நடபடிமுறைக்கிணங்க கொண்டு நடாத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

*பொருள்கோடல்.*

**6**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய -

"காணிப்பதிவாளர்" என்பது, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவு கட்டளைச்சட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்டவரும்கைமீட்கப்படுவதற்கு நாடப்பட்ட கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதியின் விடயப்பொருளாக அமைகின்ற காணி எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள வருமான காணிப்பதிவாளர் என்று பொருளாகும்; அத்துடன்

"காணி" என்பது, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவு கட்டளைச்சட்டத்திலுள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*